**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102189

1. District : மாவட்டம் Virudhunagar  PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 09/2023  Date: நாள் 28.10.2023

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018  Sections பிரிவுகள்: u/s 7
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 27.10.2023  Date to : நாள் வரை 28.10.2023
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 20.15 hrs  Time to : நேரம் வரை 01.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.10.2023  Time : நேரம் 04.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.10.2023  Time : நேரம் 04.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  விருதுநகர் மாவட்ட எல்லையில்
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  விருதுநகர் ஊரக காவல்நிலைய சரக சத்திரரெட்டியபட்டி காவல் சோதனை சாவடி அருகில் மற்றும் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் சுமார் 10 கி.மீ வடக்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.S.மகேஷ்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ஸ்ரீநிவாசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர்  (g) Address : முகவரி மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.சுந்தரேஸ்வரன், உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம். 2.திரு.முத்துகாசி, IP கேமரா ஆப்ரேட்டர், 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-இல்லை-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (சி.சால்வன் துரை, காவல் ஆய்வாளர்) இன்று 28.10.2023ஆம் தேதி அதிகாலை 04.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மகேஷ் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், எதிரிகளின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,25,000/- மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றையும் சேர்த்து (1)திரு.சுந்தரேஸ்வரன், உதவியாளர், பொறுப்பு சார் பதிவாளர், 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம். மற்றும் (2)திரு.முத்துகாசி, IP கேமரா ஆப்ரேட்டர், 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம் ஆகியோர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புநர் S.மகேஷ் (48/2023), த/பெ.ஸ்ரீநிவாசன், விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். தனி வட்டாட்சியர், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Mahesh 28.10.23

28/10/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C.SALVAN THURAI
Rank: நிலை Inspector of Police ....No. எண் .........
VVAC Virudhunagar

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.09/2023 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018**

**முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

ஐயா, பொருள்: விருதுநகர் மாவட்டம் - 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டியது - தொடர்பாக. நான் விருதுநகர் மாவட்டம், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகரில் தனிவட்டாட்சியராக கடந்த 10.07.2023-ம் தேதி முதலும், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 11.10.2023-ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். இன்று 27.10.2023 மாலை சுமார் 18.45 மணியளவில் விருதுநகர் மாவட்டம், விருதுநகரிலுள்ள தனிவட்டாட்சியர் இரயில்வே இரட்டிப்பு பாதை, அலகு-1 அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்துவரும் திரு.சுந்தரேஸ்வரன் என்பவர், இன்று (27.10.2023) பத்திரப்பதிவுகளுக்கு வாடிக்கையாளர்களுடன் வந்த பத்திர எழுத்தர்களுக்கு பத்திரப்பதிவை முடித்து கொடுத்ததற்காக, அவருக்கு கீழ் பணிபுரியும் IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசி என்பவர் மூலம் அலுவலகத்திற்கு வெளியே வைத்து பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சப்பணத்தை பெற்று, அவர் வாடகைக்கு எடுத்துவந்த பெஸ்ட் டிராக் நிறுவனத்தின் மாருதி ஸ்விப்ட் டிசையர் TN 59 BR 4834 என்ற T-போர்டு நான்கு சக்கர வாகனத்தில் மேற்படி திரு.முத்துகாசியையும் வெளியில் வைத்து ஏற்றிக்கொண்டு, அந்த பணத்துடன் இருவரும் அதே வாகனத்தில் திருநெல்வேலி - மதுரை தேசிய நான்குவழிச்சாலையில் விருதுநகர் மாவட்ட எல்லையிலுள்ள விருதுநகர் ஊரக காவல்நிலைய சரக சத்திரரெட்டியாபட்டி காவல் சோதனை சாவடியை கடந்து அவர்கள் குடியிருக்கும் மதுரைக்கு செல்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இரவு 19.00 மணிக்கு வந்து விபரத்தை கூறி, மேலும் சில தகவலை கேட்டுத்தெரிந்துக்கொண்டேன். அப்போது அலுவலகத்திலிருந்த அப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சால்வன் துரை மற்றும் அவரது குழுவினருடன் நேற்று (27.10.2023) இரவு சுமார் 19.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு நேற்று (27.10.2023) இரவு சுமார் 19.45 மணிக்கு மேற்படி காவல் அதிகாரிகள் குழுவுடன் விருதுநகர் மாவட்ட எல்லையிலுள்ள சத்திரரெட்டியபட்டி காவல் சோதனை சாவடி அருகே சென்று, திருநெல்வேலி பகுதியிலிருந்து மதுரை நோக்கி வருகின்ற வாகனங்களை கண்காணித்துக் கொண்டிருந்தோம். அப்போது, இரவு சுமார் 20.15 மணியளவில் திருநெல்வேலி

பகுதியிலிருந்து பெஸ்ட் டிராக் நிறுவனத்தின் மாருதி ஸ்விப்ட் டிசையர் TN 59 BR 4834 என்ற T-போர்டு நான்கு சக்கர வாகனம் சத்திரரெட்டியபட்டி காவல் சோதனை சாவடி வழியாக மதுரை செல்வதற்காக வந்த வாகனத்தை நான், ஆய்வாளர் திரு.சால்வன் துரை மற்றும் அவரது குழுவினர் சகிதம் மறித்து விசாரித்தபோது, மதுரையை சேர்ந்த திரு.சக்திபாலன் என்பவர் அந்த வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தார். பின்பக்க இருக்கையில் இடதுபக்கம் விருதுநகர் எண்.1 இணை சார்பதிவாளர் பொறுப்பு வகிக்கும் திரு.சுந்தரேஸ்வரன் என்பவரும், வலதுபக்கம் அந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆப்ரேட்டராக வேலை பார்க்கும் திரு.முத்துகாசி என்பவரும் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் திடீர் இணை ஆய்வு செய்யவுள்ள விவரம் சொல்லி, மேற்படி வாகனத்தை கிழக்குபுறம் திருப்பி, அணுகுசாலை ஓரமாக நிறுத்தி சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது முதலில் மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் என்பவரை சோதனை செய்ய, அவரது சட்டைப்பாக்கெட்டில் ரூ.500/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (27.10.2023) வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு கொண்டுவந்ததாக சொன்னார். ஆகையால் அந்த ரூ.500/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி திரு.முத்துகாசி என்பவரை சோதனை செய்ய, அவரது பேண்ட்பாக்கெட்டில் 100 ரூபாய், 200 ரூபாய், 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 12 எண்ணம், 200 ரூபாய் நோட்டுக்கள் 10 எண்ணம், 100 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணம் ஆக மொத்தம் ரூ.10,000/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் முழுவதும் தான் பணிபுரியும் விருதுநகர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரியும் திரு.சுந்தரேஸ்வரன் அவர்கள், இன்று (27.10.2023) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக அவர் சொன்னபடி பத்திர எழுத்தர்களிடம் வசூல் செய்து கொடுத்த லஞ்சப்பணத்திற்கு கமிஷனாக அவர் எனக்கு கொடுத்த பணம் என்று கூறினார். ஆகையால் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரியும் திரு.சுந்தரேஸ்வரன் அவர்களிடம் இதுபற்றி கேட்க, அதற்கு அவர் ஆமா சார், தான் வழக்கம்போல் அவரிடம் சொன்னதன்பேரில், அவர் இன்று (27.10.2023) பதிவுசெய்து கொடுத்த பத்திரப்பதிவுகளுக்கு சம்மந்தப்பட்ட பத்திர எழுத்தர்களிடமிருந்து எனக்கு தனியாக ஒரு குறிப்பிட்ட பணத்தை மட்டும் அவரை வசூல் செய்து தரச்சொன்னேன் சார் என்றும், அதன்பேரில் அவர் பத்திர எழுத்தர்களிடமிருந்து எனக்கு தனியாக நான் கேட்ட பணத்தை வசூல் செய்து கொடுத்தார் என்றும், அதற்காக அவருக்கு கமிஷனாக ரூ.10,000/- பணத்தை காரில் இப்ப வரும்போது கொடுத்தேன் சார் என்றும் கூறினார். பின்னர் IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசியிடம் எதற்காக இந்த பணத்தை வசூல் செய்து கொடுத்தீர்கள் என்று கேட்க, அதற்கு அவர், அவருக்கு தனியாக / லஞ்சமாக கேட்கும் பணத்தை இவ்வாறு வசூல் செய்வது தவறுதான் சார் என்று தெரிந்தும், வேறு வழியில்லாமல், தனது உயரதிகாரி என்பதாலும், தான் அவருக்கு கீழ் பணிபுரிவதாலும் வசூல் செய்து

கொடுத்துவிட்டேன் சார் என்றும், இனிமேல் இதுபோல் பணம் வசூல் செய்து கொடுக்கமாட்டேன் சார் என்றும், அதேபோல் அதற்கு அவரிடமிருந்து கமிஷன் பணமும் பெறமாட்டேன் சார் என்றும் கூறினார். ஆகையால் அந்த பணம் ரூ.10,000/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அவரை சோதனை செய்ய, மற்றொரு பேண்ட்பாக்கெட்டில் இருந்த மணிப்பர்ஸில் ரூ.540/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்த பணம் என்றும், தான் இன்று (27.10.2023) வீட்டிலிருந்து வரும்போது செலவுக்கு கொண்டுவந்ததாக சொன்னார். ஆகையால் அந்த ரூ.540/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர்கள் வந்த நான்குசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அந்த வாகனத்தின் பின்பக்க இருக்கையில் மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்பு, அவரது கால்களுக்கு இடையே மறைத்து வைத்திருந்த வயர் கூடையின் உள்பகுதியில் காக்கிநிற கவர் சற்று தடிமனாக காணப்பட்டது. அதை எடுத்து பார்க்க, அந்த தடிமனான காக்கி கவருக்குள் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்கள் இரண்டு பேப்பருடன் சுற்றி இருந்தது. அதை பிரித்துப்பார்க்க, 500 ரூபாய் நோட்டுக்கள் ரப்பர் பேண்ட்டு சுற்றி இரண்டு பண்டலாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, ஒரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 164 எண்ணம் மொத்தம் ரூ.82,000/-ம், மற்றொரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 66 எண்ணம் மொத்தம் ரூ.33,000/-ம், ஆக மொத்தம் ரூ.1,15,000/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம் முழுவதும் அவர் சொன்னதன்பேரில் இன்று (27.10.2023) பதிவுசெய்து கொடுத்த பத்திரப்பதிவுகளுக்கு சம்மந்தப்பட்ட பத்திர எழுத்தர்களிடமிருந்து எனக்கு தனியாக நான் கேட்ட பணத்தை நான் சொன்னதன்பேரில் எனக்கு கீழ் பணிபுரியும் IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசி என்பவர் மூலம் பெற்ற பணம்தான் சார் என்றும், பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக இவ்வாறு எனக்கு தனியாக பணத்தை சம்மந்தப்பட்ட பத்திர எழுத்தர்களிடமிருந்து IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசி என்பவர் மூலம் பெற்றது தவறுதான் சார் என்றும், இனிமேல் இதுபோல் தவறு செய்யமாட்டேன் சார் என்றும் பதற்றத்துடன் கூறினார். ஆகையால் அந்த ரூ.1,15,000/- பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் ரூபாய் நோட்டுக்கள் சுற்றியிருந்த இரண்டு பேப்பர்களை பார்க்க, அதில் ஒரு A4 சைஸ் முழு பேப்பரில் 6 Coloumn மற்றும் 35 Row-வாக கணினியில் எண்கள் மற்றும் எழுத்துக்கள் என சில விவரங்கள் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. அதுபற்றி பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுந்தரேஸ்வரன் அவர்களிடம் கேட்க, அதற்கு அவர், தான் இன்று (27.10.2023) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்கு, எந்தெந்த பத்திர எழுத்தர்களிடம் அரசு கட்டணம் இல்லாமல் எவ்வெவ்வளவு பணம் எனக்கு தனியாக வசூல் செய்யவேண்டும் என்பதற்கு 1000 ரூபாய் மதிப்பில் கணக்கிடும் வகையில் சில எண்கள் விவரங்களை சுருக்கமாக குறிப்பிட்டு கணினியில் நானே தட்டச்சு செய்து, அதை பிரிண்ட் எடுத்து IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசியிடம் கொடுத்த பேப்பர் என்றும், அந்த பேப்பர்தான் இது என்றும் கூறினார்.

எனவே மேற்படி A4 சைஸ் முழு பேப்பரில் 6 Coloumn மற்றும் 35 Row-வாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த பேப்பர் கைப்பற்றப்பட்டது. பின்னர் A4 சைஸ் முழு பேப்பருடன் இருந்த ஒரு துண்டு பேப்பரில் சரவ 5-, சாந்தி 7-, ASG 2-, பாரதி 4-, வெண் 11-, சிவகா 2-, சங்கர் 1-, மு.பா 45-, மனோ 1-, சுப்பு 4-, CSM 1- , 83-, கருப்பு 1, 82- என கருப்புமை பால்பாய்ண்ட் பேனாவால் எழுதப்பட்டிருந்தது. அதுபற்றி பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுந்தரேஸ்வரன் அவர்களிடம் கேட்க, அதற்கு அவர் தான் கணிணியில் தட்டச்சு செய்து IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசியிடம் கொடுத்த A4 சைஸ் முழு பேப்பரின் பேரில், அவரும் 1000 ரூபாய் மதிப்பில் கணக்கிடும் வகையில் சில எண்கள் விவரங்களை சுருக்கமாக குறிப்பிட்டு அவர் சம்மந்தப்பட்ட பத்திர எழுத்தர்களிடம் வசூல் செய்ததற்கு தனியாக குறிப்பு எழுதி கொடுத்த மற்றொரு துண்டு பேப்பர் சார் என்றும் கூறினார். இதுபற்றி IP கேமரா ஆப்ரேட்டர் திரு.முத்துகாசியிடம் கேட்க, அதற்கு அவர் ஆமா சார், பொறுப்பு சார்பதிவாளர் திரு.சுந்தரேஸ்வரன் அவர்கள் சொன்னதுபோல், தான் சம்மந்தப்பட்ட பத்திர எழுத்தர்களிடம் வசூல் செய்ததற்கு தன் கைப்பட இவ்வாறு தனியாக குறிப்பு எழுதி கொடுத்ததுதான் சார் என்று கூறினார். ஆகையால் கருப்புமை பால்பாய்ண்ட் பேனாவால் எழுதப்பட்டிருந்த அந்த துண்டு பேப்பர் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் திரு.சக்திபாலன் என்பவரையும், வாகனத்தையும் சோதனை செய்ய, அவரிடமும், வாகனத்திலும் கைப்பற்றக்கூடிய வேறு எந்தவிதமான பணமோ, ஆவணங்களோ இல்லை. பின்னர் அந்த இடம் சோதனை நடவடிக்கைகள் தயார் செய்வதற்கு ஏற்ற இடமாக இல்லாததால், அங்கிருந்து புறப்பட்டு, விருதுநகர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இரவு சுமார் 21.15 மணிக்கு வரப்பட்டது. பின்னர் அலுவலகத்திற்கு வந்து, அலுவலகத்திலிருந்த அலுவலக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு மற்றும் தற்காலிக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு ஆகியவற்றை பெற்று, பார்வையிட்டதில் அவற்றில் மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் மற்றும் திரு.முத்துகாசி ஆகியோர் தாங்கள் சொந்த செலவுக்கு வைத்திருந்த பணம் என்று முறையே ரூ.500/- மற்றும் ரூ.540/- என கூறியது சரியாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அலுவலக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு மற்றும் தற்காலிக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக இந்த திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நேற்று 27.10.2023ஆம் தேதி இரவு 20.15 மணி முதல் இன்று 28.10.2023 அதிகாலை 01.30 மணிக்குள் தயார் செய்து முடிக்கப்பட்டது. பின்னர் மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் மற்றும் திரு.முத்துகாசி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் மற்றும் திரு.முத்துகாசி ஆகியோர்களிடமிருந்த மொத்தம் ரூ.1,25,000/- பணம் பத்திர எழுத்தரிடமிருந்து அரசு கட்டணமில்லாமல் மேற்படி திரு.சுந்தரேஸ்வரனுக்காக அவர் சொல்லி மேற்படி திரு.முத்துகாசி பெற்று வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று தெரியவந்ததால், மேற்படி

திரு.சுந்தரேஸ்வரன் மற்றும் திரு.முத்துகாசி ஆகியோர்கள்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், மேற்படி திரு.சுந்தரேஸ்வரன் மற்றும் திரு.முத்துகாசி ஆகியோர்களது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,25,000/- மற்றும் 4 ஆவணங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்கிறேன். (sd) S.Magesh 28/10/23 (S.மகேஷ்) விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். தனி வட்டாட்சியர், மதுரை - தூத்துக்குடி இருப்பு பாதை இரட்டிப்பு அலகு-1, இரயில் விகாஸ் நிகாம் லிட்., விருதுநகர். Sir, Received the complaint and registered a case in Virudhunagar, V&AC, Cr.No.9/2023 U/s 7 of P.C. Act1988 as Amended in 2018 on 28.10.2023 at 04.30 hrs. The Original F.I.R. and complaint are submitted to the Hon'ble CJM cum Special Judge for P.C Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd) C.Salvan Thurai 28.10.2023 (C.SALVAN THURAI) Insp. of Police V&AC, Virudhunagar.

28/10/23
(C.SALVAN THURAI)
Inspector of Police
V&AC
Virudhunagar.